www.tamilarangam.net

# கொலைகார உமாவிற்கு அஞ்சலியா?

தமிழீழ விடுதலைப் போராட்டமானது ஆரம்பிக்கப்பட்டு ஆயுத வடிவங்களே போராட்ட வடிவங்கள் என்னும் இன்றைய நிலைவரை எமது விடுதலைப் போராட்டத்தில் தமது உயிரை நம்பிக்கைகளுடன் இழந்து போயுள்ளவர்களில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தில் ( P.L.O.T) தம்மை இணைத்துக் கொண்டு பயிற்சிப் பா ச றைகளிலேயே புதையுண்டு போன ஆயிரக்கணக்கான போராளிகளின் கனவுகள் எதிர்பார்ப்புகளை குழி தோண்டிப் புதைத்த பெருமை உமாமகேஸ்வரன் கும்பலையே சாரும். இந்த தலைமையின் அரசியல் வங்குரோத்துத் தனத்தால்தான் இவ்விளைஞர்களின் கருத்துக்களும் முனகல்களும் எழுந்த போது அதற்குப் பதிலாக உமா கும்பல் படுகொலைகளையே பரிசாககொடுத்தனர். இந்த வகையில் 500 இற்கு மேற்பட்டோரை இந்திய மண்ணில் கொன்று புதைத்தும் ஈழ மண்ணில் மென்டிஸின் தலைமையில் பல இளைஞர்களைக் கொன்றும் ஒழித்தனர்.

இன்று LTTE அடக்கு முறைகள் பாசிச வழி முறைகளை அடைந்துள்ளதும் தமிழீழ மக்களின் கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்தை முற்றாக மறுத்து மக்களின் வாழ்வை மரணத்தின் விளிம்பிற்குள் தள்ளிய LTTE இற்கு எதிராக போராடுவதாகச் சொன்ன PLOT கும்பல் இந்தியாவிலும் இலங்கையிலும் தமது இயக்கத்தினுள் தமது இயக்கத்தின் கருத்து எழுத்துச் சுதந்திரத்திற்காகப் போராடிய தோழர்களைக் கொன்றது மட்டுமன்றி LTTE, EROS EPRLF, TELO போன்ற அமைப்புகளைச் சேர்ந்த போராளிகளையும் LTTE பாணியிலேயே கொன்று குவித்தனர்.

நடுவீதியில் அநாதைப் பிணமாகக் கிடந்த கொலைகார உமாமகேஸ்வரனுக்கு அஞ்சலி செலுத்தும் உமாவின் கொலைகார சகாக்கள் LTTE இன் பாசிசத்தை மட்டும் சொல்லி தாங்கள் இன்று இலங்கை இராணுவத்தின் கால்களை நக்கி பிழைப்பதை மறைக்க முயல்கின்றனர்.

இவர்கள்
தமது அராயகத்தினால் கொல்லப் பட்ட எமது தோழர்களுக்கும் மக்களின் படு கொலைகளுக்கும் ஆன் அஞ்சலியை நிராகரிக்க முடியுமா?

அவர்களின் இலட்சியங்கள் ஒரு நாள் முளையிடத்தான் செய்யும்.

## அணிவகுப்பு

சவுக்குத் தோப்புக்குள்
கால் பதித்துப் போகும் தோழர்களே!
உங்கள் கால்களை மெதுவாகப் பதித்து
நடவுங்கள்.
எனெனில்
அங்கு தான் என் தோழர்கள்
உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்!
அவர்களின் உறக்கத்தை
கெடுத்துவிடாதீர்கள்.
அவர்கள் இவ்வுலகத்தை
மாற்றுவதற்கு
உயிர் கொடுத்தவர்கள்!
ஓ இந்தியத் திருநாடே!
உனக்குத்தான்
எத்தனை பெருமை
எம் மண் பெறாத பெருமையை
நீ பெற்றுக் கொண்டுவிட்டாய்!
உரமாகிவிட்ட
என் தோழர்களை
உள்வாங்கிவிட்டாய்!
உன் மண்ணில்
செங்கொடி பறக்கும் போது
என் தோழர்கள்
உயிர் பெற்று அணிவகுப்பர்!
நிச்சயம்
அணிவகுப்பர்!

...... - P.L.O.T இலிருந்து வெளியேறியோர் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்